[21st January 1965

அச்சுத் தொழில் பொருட்காட்சி

*53. கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் செய்தி விளம்பரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை பிரிண்ட்டர்ஸ் அண்ட் லித்தோகிராபர்ஸ் அசோசியேஷன், அச்சுத் தொழிலின் வளர்ச்சியை மதிப்பிடுவதற்கு ஒரு பொருட்காட்சி ஏற்படுத்தும் பொருட்டு, 28-7-1964-ல் கோரிக்கைகள் அனுப்பியுள்ளனரா ?

(இ) ஆம் எனில் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) ஆம்.

(இ) தற்போதுள்ள தேசிய நெருக்கடி நிலைமையை முன்னிட்டு அரசாங்க சார்பில் பொருட்காட்சிகள் நடத்த வேண்டாம் என்று உத்திரவு பிறப்பித்திருக்கிறது. ஆகவே அச்சிடுதல் சம்பந்தமான பொருட்காட்சியை நடத்தவேண்டிய அவசியமில்லை என்று அரசாங்கம் கருதுகிறது. ஆதலால் அந்தக் கோரிக்கையின் பெயரில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, அச்சுத் தொழிலுக்கு ஆர்ட் பேப்பருக்கு இறக்குமதி கோட்டா பெற மத்திய அல்லது மாநில அரசாங்கத்திடம் மெரிட் சர்டிபிகேட் பெற வேண்டுமென்று இருக்கிறது. க்வாலிடி பிரிண்டர்ஸ் என்று மெரிட் சர்டிபிகேட் பெற மத்திய அரசாங்கத்தினிடம் கோரினால் அவர்கள் இங்கே வரும்போது பார்த்துக் கொடுப்பதாக சொல்கிறார்கள். அத்தகைய சர்டிபிகேட்டை மாநில அரசாங்கம் வழங்க மற்ற ராஜ்யங்களில் ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. இங்கே அப்படி ஏற்பாடு செய்யாததால் ஆர்ட் பேப்பர் இறக்குமதி லைசென்ஸ் வாங்குவது கஷ்டமாக இருக்கிறது. இதைக் கவனித்து, அந்த மெரிட் சர்டிபிகேட்டை மாநில அரசாங்கமே கொடுக்க வழி செய்யுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : மூலக் கேள்வியில் இருந்து இந்த உப கேள்வி எழவில்லை. தனிக் கேள்வி வேண்டும்.

Hogenakkal tourist centre.

*54 Q.—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state whether there is any proposal to make Hogenakkal in Dharmapuri taluk as a tourist centre ?

கனம் திரு. கோ. பூவராகன்: ஆம், ஐயா.

திரு. எம். வி. கரிவேங்கடம் : ஹொகேனகல் உள்ளாட்சியாக நீண்ட காலமாக இருந்து வருகிறது. அதுபற்றி ஏற்கனவே திட்டமிருப்பதாலும் ராஜ்யத்தின் பிற பகுதிகளில் இருந்து ஏராளமாக ஜனங்கள் வந்து தங்கப் போவதன் காரணத்தினாலும் உடனடியாக அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவார்களா ?

21st January 1965]

கனம் திரு. கோ. பூவராகன்: அது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நிறைவேற்றப்படுவதாக இருந்தது. தேசீய நெருக்கடி காரணமாக ஒத்திவைக்கப்பட்டு இருக்கிறது.

திரு. எம். வி. கரிவேங்கடம்: இதை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவிற்குள்ளாவது தேசீய நெருக்கடியைத் தளர்த்தி உடனடியாக நிறைவேற்ற முன் வருவார்களா?

கனம் திரு. கோ. பூவராகன்: மூன்றாவது திட்டகாலத்திற்குள் நிறைவேற்ற முடியாது என்று நினைக்கிறேன்.

கனம் சபாநாயகர்: கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—CALLING ATTENTION TO OUTBREAK OF EPIDEMICS IN NORTH ARCOT DISTRICT.

திரு. எஸ். ஜே. ராமசாமி: தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் குறிப்பாக அரக்கோணம் தாலுகாவைச் சேர்ந்த மணப்பாக்கம், பள்ளூர், தக்கோலம் ஆகிய கிராமங்களில் காலரா, பெரியம்மை ஆகிய நோய்கள் பரவியுள்ளதைப் பற்றிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தைக் கனம் சுகாதார அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*THE HON. SRIMATHI JOTHI VENKATACHALAM: Mr. Speaker, Sir there were 120 attacks and 30 deaths in November 1964 and 128 attacks and 55 deaths in December 1964 due to Cholera in North Arcot district. The increase in the incidence of cholera cases during November and December 1964 was due to heavy rains during the latter part of November and due to the movement of people on account of the Karthigai Deepam festival at Tiruvannamalai. The District Health Officer, North Arcot, visited the affected villages. One of the Assistant Directors of Public Health inspected the control measures undertaken in the district and gave necessary instructions for the early control of the infection. As many as 9,601 anti-cholera inoculations were done in the affected villages of Vellore, Chengam, Cheyyar and Walajapet taluks. Necessary preventive measures such as disinfection of infected houses, materials, etc., chlorination of water sources and isolation and treatment of affected cases were also undertaken. It it reported by the Director of Public Health that the cholera situation is under close watch and sufficient number of Reserve Health Inspectors have been posted to the district to attend to the control work.

2. As regards incidence of small-pox, 19 attacks and 4 deaths in November 1964 and 31 attacks and 11 deaths in December 1964 have been reported in the North Arcot district. In Arkonam and Nemili Panchayat Unions alone, there were 21 attacks and six deaths due to small-pox in December 1964. There was no scare of small-pox in the villages of Arkonam taluk and only sporadic cases of small pox were reported. As many as 273 primary vaccinations and 4,231 re-vaccinations have been done in Arkonam taluk.